# செய்திகளும் குறிப்புகளும்

**13.08.2026, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1173**

---

**ஸ்ரீ அரவிந்தர்**

**பகவத்கீதை – பேருரைகள் - 22. குணங்களுக்கு அப்பால்**

இந்த ஆன்மா ஒன்றாயும் பலவாயும் உள்ளது. இந்த ஒரே உயிர்ச்சத்திலிருந்தே எல்லா உயிரும் உண்டாகின்றது. இதுவே உயிரினங்கள் யாவுமாயுள்ளது. இதுவே பிரபஞ்ச உயிரும் பிரபஞ்சத்தில் காணும் உயிர்களும் ஆகும். இவை யாவும் இந்த ஒன்றே. எல்லா ஆன்மாக்கள் அல்லது புருஷர்களும் ஆதியில் ஒரே புருஷனே, ஒரே ஆன்மாவே. ஆனால், இயற்கையிலுள்ளதும் அவளது தொழிற்பாட்டின் ஓர் அம்சமானதுமான அகந்தையுணர்ச்சியானது, காலதேச வர்த்தமானங்களுக்குட்பட்ட ஓர் உயிருடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொள்ளும்படி மனத்தைத் தூண்டுகிறது. பிரபஞ்ச இயற்கையின் கருமங்கள் யாவற்றிலும் விளங்கும் பிரபஞ்ச ஆன்மாவை அறிந்து, இவை யாவற்றினுடையவும் ஒற்றுமையை உணரமுடியும். ஆனால், இது மட்டும் போதாது. நமது உண்மையான ஆன்மா இதைவிட அதிகமானது; இதற்கு அப்பாலுள்ளது.

ஏனெனில், இயற்கையில் விளங்குவதாயும், அவளின் செயல்களுடன் பிணைக்கப்பட்டதாயுமுள்ள ஆன்மாவுக்கு அப்பால் புருஷனின் வேறொரு நிலை உள்ளது. அந்த நிலையில் புருஷன் செயலற்றும், நிச்சலமாயும், அழிவற்றும், சர்வவியாபியாயும், சுயம்புவாயும் இருப்பான். அவன் உயிர்களாக ஆகாமல் அக்ஷரனாக (அழிவற்று) இருப்பான். க்ஷர (அழிவுடைய) நிலையில் புருஷன் இயற்கையின் செயலில் சிக்கிக்கொண்டு விடுகிறான். ஆகவே, அவன் காலத்திலும் உயிர் சிருஷ்டிகளின் அலைகளிலும் தன்னை இழக்கிறான். அக்ஷர நிலையில், இயற்கை நிச்சலமாகி ஆன்மாவில் அமர்கிறாள். ஆகவே, அவள் தன் அழிவற்ற சீவளை உணருகிறாள். சாங்கிய புருஷன் இயற்கையில் குணங்களின் தொழிற்பாட்டைப் பிரதிபலிக்கும்போது க்ஷர புருஷனாகிறான். அவன் தன்னைச் சகுண புருஷனாக அறிந்துகொள்ளுகிறான். குணங்கள் சமநிலை அடையும்போது அவன் அக்ஷரபுருஷனாகிறான். அப்போது அவன் தன்னை நிர்க்குணனாக அறிகிறாள். ஆகவே, க்ஷரன் பிரகிருதியின் செயல்களுடன் தன்னைச் சம்பந்தம் படுத்திக்கொண்டு செயல்புரிவோனாகக் காணப் படுகிறான். அக்ஷரனோ, குணங்களின் தொழிற்பாடுகள் யாவற்றினின்றும் விலகி நின்று செயலற்ற சாட்சிபூதனாக இருக்கிறான். மானிட ஆன்மா க்ஷரனின் நிலையில் அமர்ந்திருக்கும்போது சகுணனின் விளையாடல்களுடன் ஐக்கியப்படுகிறான். அகந்தையினால் அவனது சுய அறிவு மழுங்குகிறது. அந்த நிலையில் அவன் தானே செயல் புரிவோனாக எண்ணுகிறான். அவனது ஆன்மா அக்ஷரனின் நிலையில் அமர்ந்திருக்கும்போது நிர்க் குணனுடன் ஐக்கியப்படுகிறான். அந்த நிலையில் இயற்கையே செயல் புரிவதால், தான் எப்போதும் செயலற்ற சாட்சிபூதனாக இருப்பதை உணருகிறான். மனிதனின் மனது, இந்த நிறைகளில் ஏதாவதொன்றை அடையவேண்டியதாக ஆகிறது. ஒன்று அது இயற்கைக்கு உட்பட்டுச் செயல் புரியவேண்டும்; அல்லது அவளது தொழிற்பாட்டிலிருந்து அடியோடு விலகி அழிவற்ற நிர்க்குண நிலையை அடையவேண்டும்.

ஆனால், இவை இரண்டுமே, அதாவது ஆன்மாவின் செயலற்ற, அழிவற்ற நிலையும், ஆன்மாவின் செயல் புரியும், அழிவுறும் நிலையும் உண்மையாக ஏக காலத்தில் இருப்பன. ஆன்ம வாழ்க்கையின் உயரிய உண்மை ஒன்று இராவிடின், இது இணைக்கமுடியாததோர் விபரீதமாகவே இருக்கும். இவை இரண்டும் அவ்வுயரிய உண்மையின் நேர் எதிரான இரு அம்சங்களாகும். அவ்வுயரிய உண்மை யைக் கீதை புருஷோத்தமனில் காண்கிறது. அவன் சர்வபூதேசுவரன்; பரமான்மா.அவன் தன் சொந்த, செயல்புரியும் இயற்கையையே சீவனில் வெளிப்படுத்துகிறான். அவள் ஒவ்வொரு சீவனிலும், அதனுள்ளேயுள்ள தெய்விக தருமத்திற்கு இயையவும், அதன் சுபாவத்தின்படியும், குணங்களின் விளையாடலினாலும் நடத்தப்படுகிறாள். அவள்தான் முக்குண மாயை; மனிதனால் கடப்பதற்கு அரிதான மகாமாயை. முக்குணங்களுக்கு மேற்பட்டவனே அவளைக் கடந்து செல்லமுடியும். இதையெல்லாம் க்ஷர நிலையில் ஈசுவரன் தன் இயற்கைச் சக்தியினால் செய்யும் போதும், அக்ஷர நிலையில் அவன் எதனாலும் பாதிக்கப்படாமலும், உதாசீனனாயும், எல்லாவற்றையும் சமமாகக் கருதுவோனாயும், எல்லாவற்றுள்ளும் பரவியும், எல்லாவற்றிற்கும் மேலாகவும் விளங்குகிறான். இம்மூன்று நிலைகளிலும் அவனே இறைவன். தன் மிக உன்னத நிலையில், அவன் பரமேசுவரனாயும், அக்ஷர நிலையில், எங்கும் வியாபித்துள்ள நிர்க்குணனாயும், பிரபுவாயும் விபுவாயும். க்ஷர நிலையில், உள்ளேயுள்ள இச்சாசக்தியாயும், செயலாற்றும் இறைவனாகவும் உள்ளான். சகுணத் திருவிளையாடலில் ஈடுபடும்போதும் அவன் தனது நிர்க்குணத்தின் சுதந்திரத்துடன் விளங்குகிறான். அவன் நிர்க்குணனாகவோ அல்லது சகுணனாகவோ மட்டுமில்லாமல், அவ்விரு அம்சங்களையுமுடைய ஒருவனாகவும் உள்ளான். உபநிடதம் கூறும் வண்ணம் அவன் "நிர்க்குணோ குணி" யாவான். காரியப்படு முன்பே எல்லாம் அவனாலேயே நிச்சயிக்கப்படுகின்றன. அவனது திருவுள்ளக் கருத்தின் விளைவாகவே இயற்கை அவற்றையெல்லாம் காரியப்படுத்துகிறாள். ஆயினும், நிர்க்குணனாக இருப்பதால் அவன் தன் கருமங்களால் பாதிக்கப்படுவதில்லை.

ஆனால், மனிதன் தன் அறியாமையினால் செயலுடன் ஐக்கியப்படுவதாலும், தான் தனி சீவன் எனக் கொள்வதாலும் அகந்தையுணர்ச்சியினால் மதிமயக்க மடைகிறான். தானும் இதர சீவன்களுமே யாவற்றையும் செய்வதாக அவன் எண்ணுகிறான். இயற்கையே யாவற்றையும் செய்கிறாள் என்பதையும் அறியாமையினாலும் பற்றுதலினாலும் அவளுடைய வேலையை தான் திரித்து விருபப்படுத்துகிறான் என்பதையும் அவன் காண்பதில்லை. அவன் குணங்களுக்கு அடிமைப்படுகிறான். இயற்கையின் தொழிற்பாட்டுக்குட்பட்ட மனதினின்றும் அவன் தன்னை வேறுபடுத்திக் கொள்ளுவதில்லை. ஆகவே, இன்பதுன்பங்கள், விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகிறான். அவனுக்குச் சுதந்திர மில்லை.

அவன் தான் சுதந்திரமடையும் பொருட்டு, இயற்கையின் தொழிற்பாட்டினின்றும் விலகி அக்ஷர நிலையை அடைய வேண்டும். அப்போதே அவன் திரிகுணாதீனனாகிறான்; மாறுதலும் அழிவுமற்ற புருஷன் அல்லது அக்ஷர பிரம்மனே தான் என அறிகிறான். அப்போதே, தான் அழிவற்ற நிர்க்குண ஆன்மாவென்றும், கருமங்களைச் சாட்சிபூதனாக நோக்கி அவற்றைப் பட்சபாதமின்றி ஆதரிப்பவன் என்றும், ஆனால், தான் அமைதியாயும், உதாசீனனாயும், எதனாலும் பாதிக்கப்படாமலும், நிச்சலனாயும், நிர்மலனாயும் இருப்பவன் என்றும் ஆத்மாவில் எல்லா உயிர்களுடன் ஒன்றாகவும், இயற்கையுடன் ஐக்கியப்படாமலும் இருப்பவன் என்றும் அறிகிறான். இந்த ஆன்மா, தன் சாந்நித்தியத்தினால் இயற்கையின் செயல்களை அனுமதித்தாலும், பிரபுவாயும் விபுவாயும் இருந்து தன் வியாபகத்தினால் அவற்றை ஏற்றுக்கொண்டு ஆதரித்தாலும், தானாகக் கருமங்களை உண்டாக்குவதோ, அவற்றைச் செய்வதோ, அவற்றுடன் பலனைச் சேர்ப்பதோ இல்லை. இயற்கை இவற்றையெல்லாம் செய்வதை இவன் கவனிக்கிறான். இவன் உயிர்களின் பாவ புண்ணியத்திறங்களைத் தன்னுடையவை என ஏற்பதில்லை. தான் கருவியென நினைத்துக்கொள்ளாமல் தானே செய்வோனாகக் கருதும் அகந்தையே, அறியாமையினால் மயக்கமடைந்து இவற்றை ஏற்கின்றது. ஆன்மா குணங்குறியாவும் கடந்த நிலையை எய்துவதால், மேன்மேலும் தன்னறிவு விளங்கப்பெற்று, இயற்கையின் தொழிற்பாட்டின் பந்தத்தினின்று விடுதலை அடைகிறான்.

*(தொடரும்.....)*

## ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில் நிலப் பிரச்சாரம் - 15 ஆகஸ்ட் 2026

### ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் & ஏ4ஏ- இன் 13-ஆம் ஆண்டு தொடக்கம்!



*“புதிய படைப்பு மெய்ப்படுதல்” (“ஆரோவில் மெய்ப்படுதல்”)*

**“இதற்காகவே நாம் நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.”**

*“அங்கே பரந்த, நெருங்கிய, பேரின்ப மயமான ஓர் விடியல்;*
*காலம் ஏற்படுத்திய காயங்கள் அனைத்தும் ஆறிப்போயின, இயற்கையின் மார்பில் துயரம் இனி வாழ வழியற்றுப் போனது:*
*பிரிவினை என்பது இல்லாமலே போனது, ஏனெனில் இறைவன் அங்கே வீற்றிருந்தான்.*
*ஆத்மா தன் ஒளிக் கதிரால் விழிப்படைந்த உடலை ஒளிரச் செய்தது,*
*பருப்பொருளும் ஆன்மாவும் ஒன்று கலந்து ஒன்றாயின.”*
சாவித்ரி, புத்தகம் II, காண்டம் 8 நிறைவு.

1967-இல் “ஆரோவில்லில் வசிப்பதற்கான நிபந்தனைகள்” என்பதில், ஸ்ரீ அன்னை அவர்கள் தமது முதல் நிபந்தனையாக எழுதினார்: ***“மனிதகுலத்தின் அத்தியாவசியமான ஒருமைப்பாட்டைப் பற்றிய உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பதும், அந்த ஒருமைப்பாட்டின் புற மெய்ப்பாட்டிற்காக ஒன்றிணைந்து செயல்படும் உறுதியைக் கொண்டிருப்பதும் ஆகும்.”***

பின்னர், ஜனவரி 1969-இல், ஆரோவில் தொடக்க விழாவிற்கு ஓர் ஆண்டிற்குப் பிறகு, ஸ்ரீ அன்னை ஒரு புதிய படைப்பிற்கான ஒரு புதிய உணர்வின் வருகையைப் பற்றிய தனது தீர்க்கமான நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். இதைப் பற்றி, அவர் பின்னர் தெளிவாகக் கூறினார்: ***“புதிய உணர்வு விரும்புவது (இது இதையே வலியுறுத்துகிறது): இனி எந்தப் பிரிவினைகளும் இருக்கக்கூடாது”***

புதிய உணர்விற்கு, எந்தப் பிரிவினையும் இருக்கக்கூடாது என்ற இந்தத் தேவை, ஆன்மீக வாழ்க்கைக்கும் புற வாழ்க்கைக்கும் இடையிலான “எதிரெதிர் நிலைகளுக்கும்” பொருந்தும், ஏனெனில், அவர் கூறியது போல, ***“…உண்மையில், வாழ்க்கையும் ஆன்மாவும் ஒன்றே”***

ஸ்ரீ அன்னை ஆரோவில்லை “நாளைக்கான நகரம்” என்று அழைத்தார். எதிர்காலத்திற்கான இந்த நகரம் அனைத்து நிலைகளிலும்—மனிதர்கள், பண்பாடுகள், தேசிய இனங்கள், பருப்பொருள், ஆன்மா என எதிலும்—பிரிவினையற்ற ஒரு இடமாகக் கருத்தமைவு செய்யப்பட்டது. இது புதிய உணர்விற்கும், அது கொண்டு வரவிருக்கும் புதிய படைப்பிற்கும் ஒரு இருப்பிடமாக அமைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது:

*“நாம் ஆரோவில்லை அதிமனிதனின் தொட்டிலாக மாற்றப் பாடுபடுவோம்… நாளைக்கான உண்மையை வாழ்ந்து காட்ட விரும்பும் அனைவருக்கும் ஆரோவில் அந்த இடமாக அமைந்து தன்னையே அர்ப்பணிக்க விரும்புகிறது”*

**ஆரோவில் தனது நிர்ணயிக்கப்பட்ட புற இடத்தை ஒருங்கிணைக்க வேண்டும் - புதிய உணர்வுக்கான இருப்பிடம். இந்தப் புனிதமான இடத்தை முழுமையாக்கவும் பாதுகாக்கவும் உதவிட, ஆரோவில்லின் 'ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்' ஒருமைப்பாட்டு செயல்பாட்டில் இணையுங்கள்!**

**(இந்திய மற்றும் வெளிநாட்டு) நன்கொடைகளுக்கும் வரி விலக்குகளுக்கும் பார்க்கவும்: https://land.auroville.org/new-banking-information/. செய்திகள் மற்றும் தகவல்கள்: www.land.auroville.org**
**தொடர்பு கொள்ள: lfau@auroville.org.in** அனைத்து மேற்கோள்களும் மதர்ஸ் அஜண்டாவில் இருந்து எடுக்கப்பட்டவை: 3 ஜூன் 1967; 3 ஜனவரி 1970; 20 ஏப்ரல் 1968; 22 மார்ச் 1969 & 17 செப்டம்பர் 1969.

# லேண்ட்ஸ் ஃபார் ஆரோவில் யூனிஃபைடு (LFAU)

ஆரோவில் நகர்ப்புற ஆராய்ச்சி மையம், நிர்வாகப் பகுதி, ஆரோவில் – 605101,
தமிழ்நாடு, இந்தியா.

15 ஆகஸ்ட் 2026 - ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் விழா மற்றும் 'ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்' 13ஆம் ஆண்டின் தொடக்கம்!

இன்று ஸ்ரீ அரவிந்தரின் 154-வது பிறந்தநாள். ஆனால் இது முழுமையான உண்மையின் ஒரு அம்சம் மட்டுமே. மற்றொரு கோணத்தில், வேறொரு பார்வையில் ஸ்ரீ அரவிந்தரின் பிறப்பை "ஒரு நித்தியப் பிறப்பு" என்று ஸ்ரீஅன்னை அழைத்தார். நித்தியப் பிறப்பு என்றால் என்ன என்று கேட்கப்பட்டபோது, ஸ்ரீ அன்னை பின்வருமாறு விளக்கினார்:

*“உடல் ரீதியாக, இந்த பிறப்பின் விளைவுகள் பூமி உள்ளவரை நீடிக்கும் என்பதே இதன் பொருள். ஸ்ரீஅரவிந்தரின் பிறப்பின் விளைவுகள் பூமியின் முழு இருப்பு முழுவதும் உணரப்படும். எனவேதான் நான் இதை சற்றே கவித்துவமாக 'நித்தியமானது' என்று அழைத்தேன்."*

*மன ரீதியாக, இது ஒரு பிறப்பு, இதன் நினைவாற்றல் நித்தியமாக நீடிக்கும். யுகங்கள் தோறும் ஸ்ரீஅரவிந்தரின் பிறப்பு, அது ஏற்படுத்திய அனைத்து விளைவுகளுடனும் நினைவுகூரப்படும்.*

*ஆன்ம (சைத்திய) ரீதியாக, இது பிரபஞ்சத்தின் வரலாற்றில் யுகத்திற்கு யுகம் நித்தியமாக மீண்டும் நிகழும் ஒரு பிறப்பாகும். இந்த பிறப்பு என்பது பூமியின் வரலாற்றில் யுகத்திற்கு யுகம் அவ்வப்போது நிகழும் ஒரு வெளிப்பாடாகும். அதாவது, பிறப்பு தானே புதுப்பிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் செய்யப்பட்டு, மறுஉற்பத்தி செய்யப்படுகிறது, ஒவ்வொரு முறையும் இன்னும் கொஞ்சம் கூடுதலான ஒன்றை - மேலும் முழுமையான மற்றும் பூரணமான ஒன்றை - கொண்டு வருகிறது - ஆனால் அது இறங்குதல், வெளிப்பாடு, ஒரு பூலோக உடலில் பிறத்தல் என்ற அதே இயக்கமாகும்.*

*இறுதியாக, தூய ஆன்மீகக் கண்ணோட்டத்தில், இது பூமியில் நித்தியமானவனின் பிறப்பு என்று கூறலாம். ஏனெனில் ஒவ்வொரு முறையும் அவதாரம் ஒரு புறநிலை வடிவத்தை (உடல் வடிவை) எடுக்கும்போது, அது பூமியில் நித்தியமானவனின் பிறப்பாகவே இருக்கிறது.”*

ஸ்ரீ அரவிந்தருக்கு எது உண்மையோ, அது ஆரோவிலுக்கும் உண்மை என்று நாங்கள் நம்புகிறோம். புறநிலை ரீதியாக, ஆரோவில்லிற்கு 58 வயது - ஆனால் அது ஆரோவில்லின் முழுமையான இருப்பின் ஒரு அம்சம் மட்டுமே. அவளுக்கு (ஆரோவில்லிற்கு) பல பரிமாணங்கள் உள்ளன. உள்முகமாக, ஆன்மீக ரீதியாக, பரிணாம ரீதியாக, மனித இதயத்தில் தோன்றிய முதல் ஆர்வம், முதல் பிரார்த்தனையின் கதிரோடு ஆரோவில்லிற்கு ஆழமான தொடர்புகள் உள்ளன. உதாரணமாக, மேலமை எகிப்தில் கி.மு. 1369-75 வாக்கில், அதாவது ஆரோவில்லின் தொடக்க விழாவிற்கு சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பு அக்கெனாதென் (Akhenaten) என்ற ஒரு நகரம் இருந்தது, அது ஆரோவில்லுடன் வியக்கத்தக்க ஒற்றுமைகளைக் கொண்டிருந்தது. அந்த நகரின் கல்வெட்டு ஒன்று இவ்வாறு கூறியது:

*“இது எந்தவொரு இளவரசனுக்கும், எந்தவொரு கடவுளுக்கும் சொந்தமில்லாத இடம் இது. யாரும் இதற்கு உரிமையாளர் இல்லை. இது அனைவருக்கும் உரிய இடம். பூமி இதில் மகிழ்ச்சியடையும். இதயங்கள் இதில் ஆனந்தமடையும்.”*

*ஸ்ரீ அன்னை: “(அக்கெனாதென்-இன்) முயற்சி முன்கூட்டியே செய்யப்பட்டது, ஏனெனில் மனித மனம் அதற்கு இன்னும் தயாராக இருக்கவில்லை. இருப்பினும், மனத் தளத்தில் அதன் இருப்பின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக அது மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.”*

இவ்வாறாக, ஆரோவில்லின் புறநிலை யதார்த்தங்கள் - போராட்டங்கள், வெற்றிகள், தோல்விகள் மற்றும் தாமதங்கள் - ஸ்ரீ அரவிந்தரின் புறநிலை (உடல் வடிவ) அவதாரம் ஒரு பரந்த நித்திய பரிமாணத்தில் பதிந்துள்ளது போலவே, ஆரோவில்லின் பரந்த யதார்த்தத்திலும் பதிந்துள்ளன. 'ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்' அமைப்பில் உள்ள நாங்களும், எங்கள் பணியின் கட்டங்கள், பரிணாமம் மற்றும் தொடர்ச்சியில் இந்த பல யதார்த்தங்களை உணர்கிறோம். ஆரோவில்லின் பாதுகாப்பான மற்றும் நீடித்த எதிர்காலத்திற்கான எங்கள் ஒருமைப்பாட்டு செயல்பாட்டின் 13ஆம் ஆண்டில் நாங்கள் இப்போது அடியெடுத்து வைக்கும் வேளையில், இந்த புரிதலும் பார்வையும் நம்பிக்கையுடன் தொடர்ந்து செயல்படுவதற்கான வலிமையை வழங்குகின்றன.

ஆரோவில்லின் பிரகாசமான எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையுடன்,

ஆரியதீப் மந்தாகினி

**“ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்” திட்டத்திற்கான உங்கள் நன்கொடைகளை காசோலை, வங்கிப் பரிமாற்றம் அல்லது ஆன்லைன் மூலம் குறிப்பிடவும்:**

**நன்கொடை அளித்தல் மற்றும் வரி விலக்கு விவரங்கள்: [https://land.auroville.org/new-banking-information/](https://land.auroville.org/new-banking-information/) செய்திகள், வீடியோக்கள் மற்றும் நிலத் தகவல்கள்: [www.land.auroville.org](http://www.land.auroville.org)**

**தொடர்புக்கு: [lfau@auroville.org.in](mailto:lfau@auroville.org.in)**

## தகவல்கள் (INFORMATION)

**ஃபுட்லிங்க், ஆரோவில் பண்ணைகள், ஃபார்ம் சர்வீஸ் ஆகியவற்றின் முக்கியப்பங்கு**
(Foodlink, Auroville Farms and the Role of Farm Service)

ஆரோவில்லில் உள்ள சில பண்ணைகளுக்கும் ஃபுட்லிங்கிற்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகள் குறித்து சமூகத்தில் உள்ள பலர் அறிந்திருக்கிலாம். ஒருதலைப்பட்சமாக விலையை நிர்ணயித்தல், பணம் செலுத்துவதில் சீரற்ற நிலை, விளைபொருட்களை ஃபுட்லிங்க் மூலமாக மட்டுமே சந்தைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துதல், விவசாயிகளின் வேலை தொடர்பான முடிவுகளில் சமமான பங்களிப்பு இல்லாமை போன்ற காரணங்களால், ஃபுட்லிங்க்கான விநியோகம் குறைக்கப்பட்டு உள்ளதாகவோ அல்லது நிறுத்தப்பட்டு உள்ளதாகவோ சில விவசாயிகள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, ஃபுட்லிங்க் மூலம் விற்கப்படும் விளைபொருட்களின் உற்பத்தி மூலத்தை சரிபார்க்குமாறு அவர்கள் சமூகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.
பண்ணைச்சேவையின் பார்வையில், இந்தப் பிரச்சினைகள் புதியவை அல்ல, எதிர்பாராதவையும் அல்ல.

ஃபுட்லிங்க், தற்போதுள்ள நிலையில், அது தான் உருவாக்கப்பட்டதற்கான நோக்கத்தை நிறைவேற்றவில்லை. சோலார் கிச்சன், பிடிடிசி, பிற சமூக விநியோகஸ்தர்கள் போன்ற விநியோகஸ்தர்களுடன் விவசாயிகளை இணைப்பதன் மூலம் ஆரோவில்லில் உணவு உற்பத்தி மற்றும் தேவையை ஒருங்கிணைக்க பண்ணைச்சேவை, ஃபுட்லிங்கை நிறுவியது. உற்பத்தி மற்றும் தகவல் தொடர்பை ஒருங்கிணைப்பதன் மூலம் பண்ணைகளுக்கு ஆதரவளிப்பதே ஃபுட்லிங்கின் நோக்கமாக இருந்தது.

தொடக்கத்தில், பண்ணைச்சேவையின் நிர்வாகத்தின் கீழேயே ஃபுட்லிங்க் செயல்பட்டது; அதன் நிர்வாகத்தில் பண்ணைச்சேவையின் நிர்வாகி ஒருவரும் பங்கேற்றார்.

இருப்பினும், சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, எஃப்ஏஎம்சி அமைப்பானது ஃபுட்லிங்கை பண்ணைச்சேவையிலிருந்து பிரித்து, அதற்குச் தன்னிச்சையாக செயல்பட அனுமதி அளித்தது. இந்த முடிவிற்கான காரணம் பண்ணைச்சேவைக்கு ஒருபோதும் விளக்கப்படவில்லை. அப்போதிருந்து, ஃபுட்லிங்க் தனது அசல் ஒருங்கிணைப்புப் பணியிலிருந்து விலகி, ஆரோவில்லின் உணவு உற்பத்தி அமைப்பை ஆதரிக்கும் ஒரு சேவை அமைப்பாகச் செயல்படுவதற்குப் பதிலாக, ஒரு சில்லறை விற்பனை நிலையமாக செயல்பட்டு வருகிறது.

இன்று, ஃபுட்லிங்க் ஆரோவில்லில் விளைந்த விளைபொருட்களை வெளியிலிருந்து வாங்கப்பட்ட விளைபொருட்களுடன் கலந்து, விவசாயிகளுடன் கலந்தாலோசிக்காமல் விலைகளை நிர்ணயிக்கிறது, உற்பத்தியாளர்களுக்குக் குறைவாகப் பணம் கொடுத்துவிட்டு வாடிக்கையாளர்களிடம் அதிக விலையை வசூலிக்கிறது, மேலும் விவசாய சமூகத்திற்கான ஒரு ஒருங்கிணைப்புச் சேவையாகவும் செயல்படுவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக, ஃபுட்லிங்க் இனி பண்ணைச்சேவையின் நிர்வாகத்தின் கீழ் இல்லாததால், இந்தச் சூழ்நிலையைச் சரிசெய்ய பண்ணைச்சேவைக்கு அதிகாரம் இல்லை.

ஏறக்குறைய அதே நேரத்தில், பண்ணைச்சேவை எஃப்ஏஎம்சியின் ஒரு துணை பிரிவாக அறிவிக்கப்பட்டது. இதன் பொருள், பண்ணைச்சேவை மற்றும் ஃபுட்லிங்கைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை எஃப்ஏஎம்சி தக்க வைத்துக் கொண்டுள்ளது என்பதாகும்.

தெளிவுபடுத்தும் விதமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும்: சமீபத்தில் "ஆரோவில் பண்ணைக் குழுவின் மையக் குழு" என்று பொது அறிக்கையில் கையெழுத்திட்டவர்கள், ஆரோவில் பண்ணைகளின் செயல்பாடு மற்றும் நிர்வாகத்திற்குப் பொறுப்பான அதிகாரப்பூர்வ நிர்வாக அமைப்பு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் பொறுப்பு பண்ணைச்சேவை (எஃப்ஏஎம்சியின் ஒரு துணைப் பிரிவு) இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது நிர்வாகக் கட்டமைப்பு குறித்த ஒரு தெளிவுபடுத்தல் மட்டுமே; விவசாயிகளால் வெளிப்படுத்தப்பட்ட கவலைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்கானது அல்ல.
அன்புடன், *ஜீனோ, பண்ணைச் சேவை, எஃப்ஏஎம்சியின் ஒரு துணைப்பிரிவு, நிர்வாகப் பேரவையின் பிரிவு 16 குழு.*

---

## அறிவிப்புகள் (Announcements)



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**ஃபுட் லிங்க் வழங்கும் ஆரோவில் பண்ணை சந்தை**
**ஆகஸ்ட் 2026, ஒவ்வொரு சனிக்கிழமையும் -**
**காலை 10:00 மணி - மதியம் 12:00 மணி**
**இடம்: இந்தியா ஸ்பேஸ் எதிரில், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**திரு. ரவீந்திரா மற்றும் குழுவினர் வழங்கும் தமிழ் பண்ணிசை**
**13 ஆகஸ்ட் 2026, மாலை 4:00 மணி - 5:00 மணி**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு**
**ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**இயற்கை ஓர் ஆசிரியர் (Nature as Teacher) - பாலா**
**14 ஆகஸ்ட் 2026, மாலை 4:00 மணி - 5:00 மணி**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு**
**ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**A day to remind us to Uplift Humanity to a Life Divine Uplift Humanity**
***(மனிதகுலத்தை உலகைத் தெய்வீக வாழ்க்கையாக உயர்த்த நினைவூட்டும் மனிதாபிமான தினக் கொண்டாட்டம்)***
**19 ஆகஸ்ட் 2026, ஸ்வரம், மாலை 07:00 மணி,**
**இடம்: ஸ்ரீ அரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---

**ஆர்ட் ஃபார் லேண்ட் | ஆகஸ்ட் 15 கண்காட்சிக்கான அழைப்பு**
(Art for Land | AUG 15th Exhibition Invitation)




**FROM ASPIRATION TO INSPIRATION — A Journey of Consciousness Through Art** *(ஆர்வத்திலிருந்து உத்வேகத்திற்கு – கலை வழியான ஓர் உள்ளுணர்வுப் பயணம்)* - **ஆகஸ்ட் 15 - அக்டோபர் 10 | யூனிட்டி பெவிலியன்**

ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் மற்றும் இந்தியாவின் சுதந்திர தினச் சிறப்பு நல்வாய்ப்பாக, ஆகஸ்ட் 15 அன்று கலைநிகழ்ச்சிகள் மற்றும் சிற்றுண்டிகளுடன் கண்காட்சி தொடங்குகிறது.
பேராசை மற்றும் உத்வேகம் குறித்த ஸ்ரீ அரவிந்தர் மற்றும் ஸ்ரீ அன்னை ஆகியோரின் படைப்புக்களால் ஈர்க்கப்பட்டு, நிலத்திற்கான இந்தச் சிறப்புக் கலைக் கண்காட்சியானது, முதன்முறையாக, ஆரோவில் கலைத் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளை வழங்குகிறது. இதில், அழகு, அகப் புரிதல், ஆன்மாவின் ஸ்பரிசம் மற்றும் உயர் உலகங்களைத் தேடும் கலைஞர்களான உஷா படேல், டொமினிக் டலோசோ, ஜானகிராமன் ஆகியோரின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன.
இக்கண்காட்சி, யூனிட்டி பெவிலியனில் காலை 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை திறந்திருக்கும். அனைவரும் வருக.
அன்புடன், *பிரியா, ஆர்ட் ஃபார் லேண்ட் சார்பாக*

---

**சர்வதேச இளைஞர் தினவிழா 2026 நிகழ்வு** (International Youth Day Festival 2026)

இளைஞர்களின் குரல்கள், தலைமைத்துவம் மற்றும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டாடும் இந்த மாலைப்பொழுது நிகழ்வில் எங்களுடன் இணையுங்கள்.

இவ்விழாவில் 'இணைப்பு வலைப்பின்னல்' (Web of Connection), இளைஞர் மன்றம், இளைஞர் பேச்சாளர்கள், சமூக உரையாடல்கள், நேரடி இசை மற்றும் தலைமுறைகளைத் தாண்டிய கலந்துரையாடலுக்கான வாய்ப்புகள் ஆகியவை இடம்பெறும். இந்நிகழ்வின்போது, 'இளைஞர்கள் பற்றிய ஆய்வு' ஒன்றிலும் பங்கேற்குமாறு இளைஞர்களை நாங்கள் அழைக்கிறோம்; இது ஆரோவில்லில் உள்ள இளைஞர்களின் தேவைகள், கவலைகள் மற்றும் அபிலாஷைகளை நன்கு புரிந்துகொள்ளவும், நமது சமூகத்தில் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தவும் எங்களுக்கு உதவும்.

சமூகத்திற்கான குறிப்பு: அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள வரவேற்கிறோம். ஆரோவில்லுக்கு வெளியிலிருந்து வருகை தரும் விருந்தினர்கள் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்நிகழ்வு இளைஞர்களை மையமாகக் கொண்டதாக அமைவதை உறுதிசெய்யும் வகையில், 18 முதல் 35 வயதுக்குட்பட்டவர்களுக்கான பதிவு வசதி செய்யப்பட்டுள்ளது.
https://forms.gle/qt8cB6o7x4eS3HL77
உங்களுடன் இணைந்து கொண்டாடுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்! அன்புடன், *யூத்லிங்க் குழுவின் சார்பில் கௌதம்*

---

**15.08.2026 அன்று தரிசனத் தினத்தன்று பாண்டிக்கு பஸ்வசதி**
(Pondy Trips On Darshan Day: 15 August 2026)

ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் அன்று 15.08.2026, ஸ்ரீ அரவிந்தரின் அறையை தரிசனம் செய்ய ஆரோவில்லின் கூட்டுப் போக்குவரத்தைப் பயன்படுத்த விரும்புவோருக்கு, சையர் பஸ் பிற்பகல் 3.00 மணிக்கு மாத்ரிமந்திரில் இருந்து புறப்படும். பிறகு மாலை 6 மணிக்கு திரும்பும். டோக்கன்கள் அவசியம், பித்தாங்காவின் அறிவிப்பை காணவும்.
இந்த பஸ் ஆரோவில்வாசி, புதிதாய்ச்சேர்ந்தோர், தன்னார்வலர்கள் ஆகியோர் ஸ்ரீ அரவிந்தரின் அறையை தரிசனம் செய்வதற்காக மட்டுமே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. *போலெட்*

**அழைப்பு** (Invitation)

வரவிருக்கும் "'ஸ்ரீ அன்னை'யின் 150-வது பிறந்தநாள்" முக்கிய நிகழ்வை முன்னிட்டுத் தொடங்கப்பட்ட *'பாரிஸ் முதல் புதுச்சேரி வரை'* (Paris to Pondicherry) எனும் இயக்கத்தின் இரண்டாவது விளக்கக்காட்சிக்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து, பங்கேற்று, இணைந்து செயல்படுவோம்.
**தேதி: 16.08.2026, நேரம்: பிற்பகல் 03:00 மணி முதல் 04:30 மணி வரை. இடம்: திபெத்தியன் பெவிலியன், ஆரோவில்**
உங்கள் வருகையை ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

**ஆரோலெக் கே்.ஃபிடேரியா & ஆர்ட் கேலரி** (Aurelec Cafeteria & Art Gallery)



**தினமும் மதியம் 12 மணி முதல் 2 மணி வரை திறந்திருக்கும்**

**ஆரோவில்வாசிகளுக்கு**

| | |
|---|---|
| ப.்.பே (Buffet) மதிய உணவு | ரூ. 250.00 |
| ஞாயிறு / விடுமுறை நாட்கள் | ரூ. 300.00 |
| **மாதாந்திரத் திட்டம்:** | |
| ரூ. 250 x 30 நாட்கள் | ரூ. 7,500.00 |
| எச்ஆர்டி (HRT) திட்டம் | ரூ. 2,200.00 |
| | **ரூ. 5,300.00** |
| டி.்.பின் கேரியரில் எடுத்துச் செல்ல | ரூ. 370.00 |
| ஞாயிறு / விடுமுறை நாட்கள் | ரூ. 340.00 |

பிரயோகசாலா, ஆரோலெக், ஆரோவில் - 605101, தொலைபேசி: 2622416

---

**பொருளாதார மேம்பாட்டு ஆய்வுக் குழு குறித்த அண்மையத் தகவல் (இடிஎஸ்ஜி)**
(Update on Economic Development Study Group (EDSG)

பொருளாதார மேம்பாட்டு ஆய்வுக் குழு (இடிஎஸ்ஜி) தற்போது தனது பணிகளைத் தொடங்கியுள்ளது. இந்த ஆய்வுக் குழுவின் ஒரு பகுதியாக ஆறு பணிப்பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன; ஒவ்வொரு பணிப்பிரிவிலும் ஒரு முதன்மை உறுப்பினரும் சில துணை உறுப்பினர்களும் உள்ளனர்.

அந்த 6 பணிப்பிரிவுகள் மற்றும் அவற்றின் முதன்மை உறுப்பினரின் விவரங்கள் பின்வருமாறு:
பொருளாதார சூழலியல் மதிப்பீடு - அமூர்த்தோ. துறைசார் மேம்பாட்டு உத்தி - உமா
முதலீடு மற்றும் செயல்பாட்டுக் கட்டமைப்பு - துவான். இளைஞர் மேம்பாடு மற்றும் தலைமுறை மாற்றத் திட்டமிடல்- சஞ்சீவ் புத்தாக்கம் மற்றும் தொழில் வளர்ப்பு உத்தி - சௌமியா. விழிப்புணர்வுடன் கூடிய பொருளாதாரக் கட்டமைப்பு - மனோஜ்

இந்தப் பணிப்பிரிவுகளுக்கான செயல்பாட்டு விதிமுறைகள் கீழ்கண்ட இந்த இணையதள இணைப்பின் மூலம் அறிந்துகொள்ளலாம்: https://docs.google.com/document/d/1xZfJNf93OrghO-yg7Vkea5y782lgWFIpeRu0IsUigj4/edit?tab=t.0

இந்தப் பணிப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றிற்கு வள நபர்களாகப் பங்களிக்க விரும்பும் சமூக உறுப்பினர்கள் aware@auroville.org.in என்ற முகவரிக்கு எழுதலாம்.
இடிஎஸ்ஜி குழுவின் பணிகள் முன்னேற்றமடையும் போது, அது குறித்த வழக்கமான தகவல்களைச் சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்ள ஆவலோடு இருக்கிறோம்.

---

**ஆரோவில் நூலகத்தின் அறிவிப்பு** (Announcement From Auroville library)

ஆரோவில் தொடர்பான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. **14.08.2026 (வெள்ளி) முதல் 28.08.2026 (வெள்ளி) வரை.**
ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர், சீடர்கள் மற்றும் ஆரோவில் தொடர்பான புத்தகங்களை இலவசமாக வழங்குகிறோம்.
கிடைக்கக்கூடிய புத்தகங்களைப் பார்வையிட, நமது நூலகம் திறந்திருக்கும் நேரங்களில் வருகை தாருங்கள்!
அன்புடன், *ஆரோவில் நூலகக் குழு*

---

**ஸ்டில் அலைவ்: மைக்கேல் ஜாக்சனுக்கு நடன அஞ்சலி** (Still Alive: Michael Jackson Dance Tribute)

**ஆகஸ்ட் 15 சனிக்கிழமை, மாலை 7:30 மணி. இடம்: கிரிபா** *(உணவு மாலை 6:30 மணி முதல் கிடைக்கும்)*

மைக்கேல் ஜாக்சனின் ஈடுஇணையற்ற தாளம், தனித்துவமான பாணி மற்றும் மேடை மாயாஜாலத்தைக் கொண்டாடும் ஓர் அற்புதமான **நேரடி நடன-நாடக நிகழ்வு**.டெபாஷிஷ் மற்றும் அவரது திறமையான குழுவினர், நடனம், இசை மற்றும் துடிப்பான மேடை நிகழ்த்துகையின் மூலம் மைக்கேல் ஜாக்சனின் ஆற்றலையும் கலைத்திறனையும் உயிர்ப்பிக்கின்றனர்.
இந்த உலகில் இதுவரை வாழ்ந்த மிகச் சிறந்த பொழுதுபோக்கு கலைஞரான **மைக்கேல் ஜாக்சனைக் கொண்டாட**, அனைவரும் அன்புடன் வரவேற்கப்படுகிறீர்கள்.
**அனைவருக்குமான பொது நிகழ்வு | அனுமதி இலவசம் | விருப்பப் பங்களிப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

**பின்வரும் மேற்கோள்கள் "ஸ்ரீ அரவிந்தர் தம்மைப்பற்றி" (On Himself) இலிருந்து எடுக்கப்பட்டவை:**

**"நீங்கள் ஒரு சுயசரிதையைத் தருவதில் தொடர்ந்து உறுதியாக இருப்பதை நான் காண்கிறேன் — அது உண்மையில் அவசியமானதா அல்லது பயனுள்ளதா? இந்த முயற்சி தோல்வியடைவது நிச்சயம், ஏனென்றால் நீங்களோ அல்லது வேறு யாரோ எனது வாழ்க்கையைப் பற்றி எதையுமே அறியவில்லை; அது மனிதர்கள் பார்ப்பதற்காக வெளிப்புறப் பரப்பில் அமைந்திருக்கவில்லை."** - பக்கம் 378

Savitri
BHAVAN

## <u>ஸ்ரீ அரவிந்தரின் கவிதைகள் - ஓர் ஆய்வு வட்டம்</u> (Sri Aurobindo's Poetry - A Study Circle)



ஸ்ரீ அரவிந்தரின் கவிதைகள் எனும் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தைப் படிப்பதன் மூலமும், பாராயணம் செய்வதன் மூலமும், சிந்திப்பதன் மூலமும், பகிர்ந்துகொள்வதன் மூலமும் நமது புரிதலையும் அனுபவத்தையும் வளப்படுத்திக்கொள்ள ஓர் 'ஆய்வு வட்டம்' தொடங்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஸ்ரீ அன்னை இருந்த போது ஆசிரமப் பள்ளியில் மாணவராக இருந்த இக்கவிதைகளை இரசித்து திளைத்து வந்த அரவிந்தரே இக்குழுவை வழிநடத்துவார்.

இந்த ஆய்வு வட்டத்தில் சேர விரும்புவோர், வெள்ளிக்கிழமைத் தோறும், **மாலை 5.30 மணிக்கு சாவித்திரி பவன் கார்டன் அறையில்** நடைபெறும் நிகழ்விற்கு வரவேற்கிறோம்.

உங்களுக்கு இதில் விருப்பம் இருந்தும் நேரில் வர இயலாத சூழல் இருந்தால், தயவுசெய்து சாவித்திரி பவனை (0413 2622922) அல்லது அரவிந்தா அவர்களை (94873 29480) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.

---

## <u>வழிகாட்டப்பட்ட யோக நித்ரா அமர்விற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்</u>
<u>(You are warmly invited to a guided Yoga Nidra session)</u>

ஸ்ரீ அரவிந்தர் மற்றும் ஸ்ரீ அன்னை ஞானம் நிறைந்த இந்த அமர்வு, ஆழ்ந்த புத்துணர்ச்சி தரும் ஒலிப் பயணத்துடன் இணைந்து நடைபெறும்.

இது ஆழ்ந்த அக ஓய்வு, ஒருங்கிணைதல் மற்றும் ஏற்புத்தன்மைக்கான ஒரு புனிதமான இடமாகும். இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக, உங்கள் ஆன்மீக விருப்பத்தின் படிகமாக அமையும் ஒரு குறுகிய, நேர்மறையான வாக்கியமான சங்கல்பத்தைத் தயாரிக்க உங்களை அழைக்கிறோம்.

தயவுசெய்து சில நிமிடங்கள் முன்னதாகவே வரவும். இது, பயிற்சியின் அமைதியையும் ஆழத்தையும் நாம் ஒன்றாகக் கொண்டாட உதவும்.

கொண்டு வர வேண்டியவை: முடிந்தால் யோகா பாய் அல்லது படுத்துக்கொள்ள மெத்தைகள் இருந்தால் கொண்டு வரவும்.
**ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை**
சன்னி மற்றும் குழுவினரால் சாவித்திரி பவனில், சங்கம் ஹாலில் நடத்தப்படும். *சாவித்ரி பவன்*

---

## <u>ரமண பாலச்சந்திரனின் இசை நிகழ்ச்சி (A Musical Offering by Ramana Balachandran)</u>

**மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டர்**
**16 ஆகஸ்ட், ஞாயிறு, மாலை 6:30 முதல் 7:45 வரை**

அலுவலக கேட் வழியாக உள்ளே செல்லவும்
விருந்தினர்கள் தங்கள் 'ஆரோகார்டை' உடன் எடுத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்
விருந்தினர்களுக்கான கடைசி நுழைவு நேரம்: மாலை 6:15 மணி
ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே அனுமதி உண்டு

---

## <u>பாரத் நிவாஸ் நினைவுப் பரிசு பொருட்கள் விற்பனையகத்தில் ஆரோவில் தயாரிப்புப் பொருட்களைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் அழைப்பு</u>
<u>(Invitation to Display and Sell Auroville Products at Bharat Nivas Souvenir Shop)</u>

அன்பார்ந்த ஆரோவில்வாசிகள் மற்றும் நண்பர்களே,
வணக்கம்.

பாரத் நிவாஸ் வளாகத்திற்குள் ஒரு நினைவுப் பரிசு பொருட்கள் விற்பனையகம் (Souvenir Shop) செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். நமது சமூக உறுப்பினர்கள் மற்றும் எஃப்ஏம்சி-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட யூனிட்டுகள், தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்கள், கலைப் படைப்புகள், மட்பாண்டங்கள், அணிகலன்கள் மற்றும் உள்ளுணர்வுடன் உருவாக்கப்பட்ட பிற தயாரிப்புகளை இந்த விற்பனையகத்தில் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் அழைக்கிறோம்.
இந்த முயற்சி, ஆரோவிலுக்கு வருகை தரும் பார்வையாளர்கள், அர்த்தமுள்ள மற்றும் உள்ளுணர்வுடன் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளைக் கண்டறிந்து வாங்குவதற்கும், தங்கள் வருகையின் நினைவாக அவற்றை வைத்துக்கொள்வதற்கும் ஒரு வாய்ப்பை வழங்கும்.

மேலும் விவரங்களுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:
மின்னஞ்சல்: <u>bharatnivastrust@auroville.org.in</u>. தொடர்பு எண்: 8249335483

உங்கள் பங்கேற்பையும், நமது ஆரோவில் சமூகத்தின் படைப்பாற்றல் மற்றும் கைவினைத் திறனை வெளிப்படுத்துவதையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.
நம்பிக்கையுடனும் அன்பிடனும், அன்னையின் சேவையில், ஜன்மேஜய் மொஹந்தி, பாரத் நிவாஸ் அறங்காவலர்

# அனைவருக்கும் இனிய சுதந்திர தின நல்வாழ்த்துக்களும்
# ஸ்ரீ அரவிந்தர் பிறந்த நாள் நல்வாழ்த்துக்களும் உரித்தாட்டும்!



**<u>ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு</u>**
**<u>ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்</u>**

**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழா & சுதந்திர தினவிழா**
**கொடி ஏற்றுதல். அதனைத் தொடர்ந்து காலை உணவு மற்றும் சிலம்பம்**
**15 ஆகஸ்ட் 2026, சனிக்கிழமை, காலை 08:20 மணி,**
**இடம்: கலா கேந்திரா, பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

**<u>ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சி</u>** <u>(Sri Aurobindo's Anniversary program)</u>

*மின்னலின் வீரியமிக்க ஒரு மைந்தன் அக்னிச் சுடரேந்திய விரைந்த அடிகளுடன் பூமிக்கு இறங்கிவந்தான்;*
*ஒரு கருவறையில் ஒளி உருப்பெற்றது, மனித உருவத்திற்குள் இடியின் ஆற்றல் நிரம்பியது.*
*விண்ணகத்தின் அமைதியான வேகமும், இனிய பெருமையும், தூய உணர்வும், இறக்கையுள்ள ஆற்றலும் தரையிறங்கின;*
*ஒரு மானுட உடலில் தேவ கணங்கள் அனைவரும் உறைந்தனர், ஒரே பெயரைத் தாங்கி நின்றனர். -* ஸ்ரீ அரவிந்தர்

**ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு ஃபோன்பயருடன் கூடிய கூட்டுத் தியானம்**
**15 ஆகஸ்ட் 2026, சனிக்கிழமை, மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டர், அதிகாலை 4:45 மணி முதல் 5:45 மணி வரை**

**ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாளை முன்னிட்டு ஆரோவில்வாசிகளால் ஸ்ரீ அரவிந்தரின் காயத்ரி மந்திரம் மற்றும் புனித சமஸ்கிருத ஸ்தோத்திரங்கள் பாராயணம் செய்தல் அதிகாலை 5:45 மணி முதல் 6:15 மணி வரை**

**அனுமதி:** இரண்டாவது ஆலமர கேட் (வியுவிங் பாயிண்ட் கேட்) வழியாக **மட்டும்**, அதிகாலை 4:00 மணி முதல். <u>(வாகன நிறுத்துமிடம் கீழே குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தலின்படி)</u>
அனைவரும் அதிகாலை 4:45 **மணிக்குள்** அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
அதிகாலை 5:00 **மணி முதல்** 5:45 **மணி வரை கேட் மூடப்பட்டிருக்கும்**.

**<u>முக்கியத் தகவல்</u>**
மாத்ரிமந்திரின் ஆம்பித்தியேட்டரில் நடைபெறும் ஃபோன்பயர், ஒரு தனித்துவமான கூட்டுச் சூழலில் தனிநபர்கள் அக அமைதியை உணர்வதற்கான ஒரு வாய்ப்பாகும். இந்தச் சிறப்புமிக்க சூழலைத் பராமரிக்க, அனைவரும் முழுமையான அமைதியைக் காக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

'பார்க் ஆஃப் யூனிட்டி' (Park of Unity), மாத்ரிமந்திர் தோட்டங்கள் மற்றும் ஆம்பித்தியேட்டரில் பைகள், கைபேசிகள், கேமராக்கள், டேப்லெட்டுகள் மற்றும் பிற பதிவுச் சாதனங்கள் கொண்டுவர கண்டிப்பாக அனுமதியில்லை. உங்களது உடமைகளை வீட்டிலோ, வாகனத்திலோ விட்டுவரலாம் அல்லது 'பார்க் ஆஃப் யூனிட்டி'க்கு வெளியே மேற்கு கேட் அருகில் உள்ள 'உடமைகள் பாதுகாப்பு மையத்தில்' (Custody Facility) ஒப்படைக்கலாம். மாத்ரிமந்திர் நிர்வாகம் உங்களது பொருட்களுக்கு அதிகபட்ச கவனம் செலுத்த முயற்சிக்கும், இருப்பினும் 'பார்க் ஆஃப் யூனிட்டி' பாதுகாப்பு மையத்தில் ஒப்படைக்கப்படும் பொருட்கள் திருடப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ நிர்வாகம் பொறுப்பேற்காது.

**<u>போக்குவரத்து அறிவுறுத்தல்கள்</u>**

அனைவரும் காரில் வருவதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
இருசக்கர வாகன நிறுத்துமிடம் இரண்டாவது ஆலமரப் பகுதியில் உள்ளது.
கார்களைப் பார்வையாளர்கள் மைய (Visitors Center) வாகன நிறுத்துமிடத்திலோ (அங்கிருந்து பேருந்து வசதி உள்ளது) அல்லது பாரத் நிவாஸிலோ (குறைந்த அளவிலான இடவசதி) நிறுத்த வேண்டும்.
தயவுசெய்து மாத்ரிமந்திருக்கு உங்களுடைய செல்லப்பிராணிகளைக் கூட்டிக் கொண்டு வர வேண்டாம்.

உங்களின் பங்கேற்பின் மூலம், இந்தக் கூட்டுத் தியானத்தை அக அனுபவத்தின் ஒரு விலைமதிப்பற்ற தருணமாக மாற்ற உதவ முடியும். உங்களின் புரிந்துணர்விற்கும் ஒத்துழைப்பிற்கும் முன்கூட்டியே நன்றிகள்.

**ஆம்பித்தியேட்டரில் மாலை நேர நிகழ்ச்சி மாலை 6:15 மணி முதல் 7:00 மணி வரை**
இசைத் தியானம் - புல்லாங்குழலில் சந்திரா மற்றும் ஹார்ப்பில் தபன் வழங்கும் இசை நிகழ்ச்சி.
அலுவலக கேட் வழியாக மாலை 5:45 மணி முதல் அனுமதி. விருந்தினர்களுக்கான கடைசி அனுமதி மாலை 6:15 மணி.
விருந்தினர்கள் தங்களுடைய 'ஆரோகார்டை' உடன் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
*(அனுமதி ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே)*
**நல்வாழ்த்துகள்!**

"என்னுள்ளே ஆன்மீகத்தை நோக்கிய எந்தவொரு ஈர்ப்பும் இருந்ததில்லை, நானே ஆன்மீகத்தை வளர்த்தெடுத்துக் கொண்டேன். மெய்யியலை (metaphysics) புரிந்து கொள்ளும் திறன் எனக்கு இருக்கவில்லை, நான் ஒரு தத்துவஞானியாக வளர்ந்தேன். ஓவியக் கலையை ரசிக்கும் பார்வை எனக்கு இருக்கவில்லை — யோகத்தின் மூலமே அதை நான் வளர்த்தெடுத்துக் கொண்டேன். என் இயல்பை அது என்னவாக இருந்ததோ அதிலிருந்து என்னவாக இல்லையோ ஒன்றாக உருமாற்றினேன். அதை ஒரு சிறப்பு முறையின் மூலமே செய்தேன், எந்தவொரு அற்புதத்தின் மூலமும் செய்யவில்லை; என்ன செய்ய முடியும் மற்றும் அதை எவ்வாறு செய்ய முடியும் என்பதைக் காட்டுவதற்காகவே அதைச் செய்தேன். எனது சொந்தத் தனிப்பட்ட தேவையின் காரணமாகவோ அல்லது எந்தவொரு வழிமுறையும் இல்லாத அற்புதத்தின் மூலமாகவோ நான் அதைச் செய்யவில்லை. அவ்வாறு இல்லையெனில், எனது யோகம் பயனற்றது மற்றும் எனது வாழ்க்கை ஒரு தவறான செயல் — எந்தவொரு அர்த்தமோ விளைவோ இல்லாத இயற்கையின் ஒரு விசித்திரமான விபத்து என்றே கூறுவேன். நான் செய்தவற்றுக்கு என்னைத் தவிர வேறு எவருக்கும் எந்த அர்த்தமும் இல்லை என்று கூறுவது எனக்குச் செய்யப்படும் ஒரு பெரிய புகழாரம் என்று நீங்கள் அனைவரும் நினைப்பதாகத் தெரிகிறது — ஆனால் அது எனது பணிக்குச் செய்யப்படக்கூடிய மிகக் கடுமையான சேதத்தை விளைவிக்கும் விமர்சனமாகும். மேலும், இதை நான் சுயமாகச் செய்யவில்லை, சுயமாக என்பதன் மூலம் அதுவரையிருந்த அரவிந்தரைக் குறிப்பதாக இருந்தால். கிருஷ்ணரின் மற்றும் திவ்ய சக்தியின் (அன்னை) உதவியுடனேயே அவர் அதைச் செய்தார். எனக்கு மனித மூலங்களிலிருந்தும் உதவிகள் கிடைத்தன." *- "ஸ்ரீ அரவிந்தர் தம்மைப்பற்றி" (On Himself) இலிருந்து எடுக்கப்பட்டவை -பக்கம் 148-9 (13-2-1935)*